R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020(P)
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2018 at Batlagundu Post office.
March 2018



வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில்
புதுவருட ஸ்தோத்திர கூட்டம்

நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே
எப்போழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக – 1கொரிந்தியர் 15:58

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M & Our TV Program:
Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 மார்ச் 2018 கனி 4

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:30 - 5:45 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel


**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 211

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. தாவீது ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம் பண்ணுகிறவனாயிருந்து இரண்டு காலும் முடமாயிருந்த சவுலின் குமாரனின் மகன் யார்?
2. வேறொரு சுவிசேஷம் உண்டா?
3. யூதாவின் ராஜாவாக ஏழுநாள் ராஜாவாயிருந்தவன் யார்?
4. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் எப்படிப்பட்டவைகள்?
5. சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே போன குஷ்டரோகிகள் எத்தனைபேர்?
6. வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்த பவுலின் உடன் சேவகன் யார்?
7. பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது என்று ஜெபித்த ராஜா யார்?
8. அப்போஸ்தலனாகிய பவுல் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன் என எந்த சபைக்கு கடிதம் எழுதினார்?
9. சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் வந்த பொன் எத்தனை தாலந்து நிறையாயிருந்தது?
10. நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது உங்களுக்கு முன்னறிவித்தோம் என பவுல் எந்த சபைக்கு எழுதினார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்**

29

நாள்: புதன் கிழமை 14.03.2018
நேரம்: காலை 11.00 மணி
இடம்: சகோ.பாஸ்கரன், தேவ ஊழியர்
கோயில் திருமாளம்
பூந்தோட்டம் - 609 503
திருவாரூர் மாவட்டம்
சகல தொடர்புக்கு:
B.அர்ஜூனன், 9443558041



சிறுவர் பகுதி

## ரெபெக்காள் - Rebekah

K.Mohan
வேத பகுதி: ஆதியாகமம் 24:12-22

அருமையான சிறு பிள்ளைகளே நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இம்மாதம் ரெபெக்காள் என்ற பெண்ணை பற்றி பார்ப்போம். ஆபிரகாம் தனது மகனான ஈசாக்குக்கு பெண் கொள்ளும்படி தன் வேலைக்காரனை தன்னுடைய தேசத்திற்கு அனுப்புகின்றான். தன்னுடைய எஜமானுடைய மகனுக்கு பெண் கொள்ளும்படி பத்து ஒட்டகங்களுடன் நாகோருடைய ஊருக்கு வருகிறான். மிகப்பெரிய பொறுப்பை கொடுத்த தன் எஜமானுக்கு நல்ல பெண்ணை தேர்ந்தெடுக்க விரும்புகிறான். அந்த ஊரின் தண்ணீர்த்துரவண்டையிலே நின்று மனதில் ஒரு முடிவு எடுக்கிறான். இங்கு தண்ணீர் எடுக்க வரும் பெண்களிடம் எனக்கு குடிக்க தண்ணீர் வேண்டும் என்பேன் யார் உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தருகிறேன் என்று சொல்கிறாளோ, அப்பெண்ணையே நீர் தேர்ந்தெடுத்தீர் எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும் என்று வேண்டிக்கொண்டான்

அப்பொழுது பெத்துவேலின் மகள் ரெபெக்காள் தண்ணீர் எடுக்க வந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும் புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி; உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொன்னாள்

அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்றான். இப்படியாக ரெபெக்காளின் திருமணம் கர்த்தருடைய பிள்ளையோடு நடந்தது.

**மனப்பாட வசனம்**

**“கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்" ஆதியாகமம் 24:31**


FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai st., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief. sd

Date:28.02.2018 Signature of Publisher.





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 18 மார்ச் -2018 கனி - 4


ஆசிரியருரை

## அறிவு மற்றும் அன்பு
### Knowledge & Love



அறிவு நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமானது. அதே அறிவு பெருகிவிட்டால் அது என்னவாகும்? வேதம் சொல்லுகிறது; "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே, அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" என காண்கிறோம் (1கொரி.8:1). எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லக்கூடிய அறிவு இறுமாப்பை அவர்களுடைய வாழ்க்கையில் உண்டுபண்ணும். விக்கிரகமானது ஒன்றுமில்லை. ஆனால் அநேகர் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை புகழ்வார்கள். "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை" (1கொரி.8:2). ஆம், பொதுவாக அறிவு பெருத்தவர்கள் மற்றவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாங்கள் சொல்வதுதான் சரி என்று வாதிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் சொல்வது தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் இருக்கிறது என்பதைப்போல இருக்கிறது. அவர்கள் ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாக அறிவில்லையென்றே சொல்லவேண்டும். அறிவு பெருத்தவர்களைக்குறித்து வேதம் இவ்விதமாக சொல்லுகிறது; "அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்" (பிர.1:18).

நான் ஞானமாக செய்யக்கூடியவன் என்று சொல்லுகிறவர்களைப் பாருங்கள். அவர்கள் அவ்வப்போது சலித்துக்கொள்வார்கள். மற்றவர்கள் எது செய்தாலும் அவர்களுக்கு அது பிடிக்காது. ஆகையால் மற்றவர்கள் செய்த காரியத்தை நினைத்து இப்படியிருக்கிறார்களே என்று சலித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட சலிப்பு வருவதற்காக காரணம் தங்களை அதிக ஞானவான்களாகவும் மற்றவர்களை குறைத்தும் மதிப்பிடுவதால் அவர்களுடைய அதிக ஞானத்திலே சலிப்பு ஏற்படும். அதைப்போல அறிவு பெருத்தவர்கள் நோவு அதாவது வேதனை பெருத்தவர்கள். அவர்களால் நிம்மதியாக இருக்கமுடியாது. ஒரு மனிதனுக்கு தேவையான அறிவை தேவன் கொடுத்திருக்கிறார். அது அவனுடைய வாழ்க்கைக்கு போதுமானதாக இருக்கிறது. இதற்குமேலும் அதை பெருக்கிக்கொள்ளவேண்டும் என்று நினைத்து அதிகம் படித்து அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறவர்கள். வேதனைகளை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். தேவன் அறிவை மூளையில் வைத்துள்ளார்.

அந்த மூளை சரீரத்தில் ஒரு சிறிய அவயவமாயிருக்கிறது. சரீரத்தைப்போல அது பெரியதாக இல்லை. சிறியதாகவே இருக்கிறது. சிலருடைய எண்ணம் சரீரம் மூளை அளவும் மூளை சரீர அளவும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று நினைப்பார்கள். அது நினைப்பதற்கு வேண்டுமானால் நலமாக தோன்றலாம் ஆனால் அது சரியல்ல. தேவன் எல்லாவற்றையும் நேர்த்தியாக அமைத்திருக்கிறார். இது அவருடைய அநந்த ஞானமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பேசும்போது பெஸ்து "பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான். அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்" என்றான் (அப்.26:24,25). பவுலை இறுமாப்புள்ளவன் என்று கருதி அதிக கல்வி உனக்கு பயித்தியமுண்டக்குகிறது என்று பெஸ்து சொல்ல ஆரம்பித்தான். உண்மையிலே பவுல் ஒரு கல்விமான்தான் கமாலியேலின் பாதத்தருகே படித்தவன். நன்கு கற்றுத்தேர்ந்தவன். ஆனால் மற்ற ஞானவான்களைப்போல பவுல் இல்லை. தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைந்தவர். ஆகையால் நான் பயித்தியக்காரனல்ல சத்தியமும் சொஸ்தபுத்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்றார். அன்பான வாசகரே, நீங்கள் ஒரு ஞானவானாக இருக்கிறீர்களா? அறிவுக்கு முக்கியத்துவம்கொடுத்து மற்றவர்களை அதாவது அறிவில் வளர்ச்சியடையாதவர்களை அற்பமாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? தேனை மிகுதியாக உண்பது நல்லதல்ல என்று வேதம் சொல்லுகிறது. அதைப்போல அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என வேதம் சொல்லுகிறது. உங்களுடைய அறிவு கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிகிற அறிவில் வளர்ச்சியடையத்தக்கதாக அவைகளுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும் என படித்தோம். ஆம், அன்பு இருக்குமிடத்தில் தேவன் இருப்பார். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என காண்கிறோம். அன்பைப் பற்றி வேதம் அழகாக எடுத்துரைக்கிறது. "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என 1கொரி.13:1-3 வசனங்களில் படிக்கிறோம். அன்பைப் பற்றி பேசாத மதங்கள் இல்லை நாடுகள் இல்லை, வீடுகள் இல்லை, நகரங்கள் இல்லை, கிராமங்கள் இல்லை, எல்லோரும் அன்பை மிகவும் அழகாக பேசுகிறார்கள். ஆனால் அந்த அன்பின்படி தாங்கள் நடக்கிறார்களா என்றால் இல்லை. அன்னதானம் செய்கிறார்கள். தங்களுடைய காணியாட்சிகளை ஏழைகளுக்குக் கொடுக்கிறார்கள். ஏன் தங்களுடைய சரீர அவயவங்களை தானம் செய்கிறார்கள். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அன்பாக நடக்கவில்லை என்றால் அவர்களுடைய அன்னதானமும், அவர்களுடைய காணியாட்சிகளும், அவர்களுடைய சரீர தானமும் என்னத்திற்கு? அவன் தன்னுடைய சரீரத்தையே சுட்டெரிக்க கொடுத்தாலும் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை என வேதம்




## நடப்புச் செய்திகள்

- திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததால் பூக்கள் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
- மும்பையை அடுத்த நவிமும்பையில் ரூ16,700/- கோடியில் உருவாக உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு அடிக்கல் நாட்டினார் பிரமர் நரேந்திரமேடி.
- ஆப்கானிஸ்தானில் நடைபெறுகிற உள்நாட்டுப் போரில் கடந்த ஆண்டில் மட்டும் பலியான அப்பாவி மக்களின் எண்ணிக்கை 10 ஆயிரம்.

## கிறிஸ்துவின் சபை (இராஜ்யம்)
## Church of Christ (Kingdom)

*-K.Ramraj*




| | |
|---|---|
| 1. 1.நாளா.17:11 | – தேவன் முன்னுரைத்தார். |
| 2. ஏசா.2:3, எபே.3:10 | – திரளான ஜனங்கள் அங்கு ஓடி வருவார்கள். |
| 3. தானி.2:44 | – அழியாத ராஜ்யத்தை ஏற்படுத்துவார். |
| 4. மத்.4:17 | – கிறிஸ்துவால் பிரசங்கிக்கத் தொடங்கின ராஜ்யம். |
| 5. மத்.6:10 | – கிறிஸ்து அந்த ராஜ்யம் வர ஜெபித்தார். |
| 6. மத்.16:18,19 | – இயேசு கட்டுவேன் என்று சொன்ன ராஜ்யம். |
| 7. மாற்.9:1 | – அந்த நாளில் இருந்த ஜனங்கள் மத்தியில். |
| 8. அப்.1:4,5 | – அதற்காக காத்திருக்கும்படி இயேசு சொன்னார். |
| 9. அப்.2:1-4 | – ஆண்டவர் சொன்னபடி பெலத்தோடே வந்தது. |
| 10. அப்.2:17,18,23,24, | – பரிசுத்த ஆவியானவருடைய திறவுகோல். |
| 11. அப்.2:38-41 | – கதவுகள் திறக்கப்பட்டது 3000பேர் திருமுழுக்கு. |
| 12. அப்.2:49 | – கர்த்தர் தமது சபையில் சேர்க்கிறார். |
| 13. கொலோ.1:13,14 | – குமாரனுடைய ராஜ்யத்திற்குட்படுத்தினார். |
| 14. எபே.5:23 | – கிறிஸ்துவே தலைவராயிருக்கிறார். |
| 15. எபே.1:22,23 | – கிறிஸ்துவின் சபை அவருடைய சரீரம். |
| 16. அப்.9:4 | – சவுல் சபையை துன்பப்படுத்தியபோது இயேசு. |
| 17. கொலோ.1:24 | – பவுல் சொன்னார். |
| 18. கொலோ.1:28 | – சபையில் ஒவ்வொருவருடைய பணி. |
| 19. எபி.9:15 | – புதிய உடன்படிக்கைபண்ணப்பட்டது. |
| 20. யோவா.6:48-58 | – கைக்கொள்ளும்போது நித்தியஜீவன். |
| 21. 1கொரி.15:19-24 | – பிதாவாகிய தேவனிடத்தில் இயேசு கிறிஸ்து. |
| 22. 2தீமோ.4:3 | – செவித்தினவுள்ளவர்களாய் இருக்காதீர்கள். |
| 23. நீதி.28:9 | – வேதத்தை கேளாதபடி செவியை விலக்காதே. |
| 24. 2தீமோ.4:5 | – ஊழியத்தை நிறைவேற்றுங்கள் |
| 25. ரோமர்16:16 | – கிறிஸ்துவின் சபையார் வாழ்த்துகிறார்கள். |

## வேத அறிவுப்போட்டி எண் 208 ன் விடைகள்

1.Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
2.Mrs. அன்புக்கமலம் - காரைக்குடி
3.Mrs. ஜோதிமணிஅப்பாத்துரை -ஸ்ரீவில்லிபுத்தூர்
4.P. சந்திராடேனியேல் - நாஞ்சான்குளம்
5.Mrs. பாலின் மார்ட்டின் - காரைக்குடி
6.B. ஞானதீபம் ஜெபராஜ் - இடையான்குடி
7.Mrs. ஞானம் பிலிப் - கோவை
8.Mrs. ஜாய்மேத்யூ - விக்கிரமசிங்கபுரம்
9.Mrs. ரத்னாபாய்பிரசாத் - மதுரை
10.Mrs. ஆலிவ் ஜெயபாலன் - கோவை
11.Mrs. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் - சென்னை
12.E. ஜாய் ஹலன் புனிதா - சென்னை
13.A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
14.Mrs. தேவபுஷ்பம் - நாசரேத்
15.R. ஜெபக்கனி - கூமாபட்டி
16.Mrs. கிறிஸ்டோபல்சாலொமோன் - கோவை
17.Mrs. ஆலிஸ்குணசீலி - ஸ்ரீவைகுண்டம்
18.S. சாந்தகுமாரி - நாசரேத்
19.Mrs. தேவதாதேவபிரியம் - சென்னை
20.Mrs. ராஜம்மாள் - திருப்பூர்
21.Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
22.E. அதிசயம் - பனைகுடி
23.Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
24.Mrs. ரூபவல்யா - நாசரேத்
25.K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
26.T. ராஜாத்தி - கோம்பை
27.Mrs. ரூபிஜெயா - கலுங்குவிளை
28.R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
29.Mrs. அல்லிராணிகாட்வின் - சென்னை
30.S. ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
31.Mrs. மேரிநிர்மலா - மதுரை
32.J. விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
33.Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
34.Mrs. ஜெமிநல்லையா - மதுரை
35.Mrs. சுசீலாராஜசிங் - தலபதிசமுத்திரம்
36.S. தங்கம் - சாந்தாபுரம்
37.T. ஏஞ்சலின் நேசமலர் - சாந்தாபுரம்
38.N. ஜெபத்தாய் - நாசரேத்
39.Mrs. இந்திராஜெபக்கனி - நாசரேத்
40.S.A. சாமுவேல் - பரமத்தி
41.Mrs. பிரமிளாரேவதி - கோவை
42.S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
43.Mrs. கெத்சிசெல்வின் - சென்னை

## வேத அறிவுப்போட்டி எண் 209 ன் விடைகள்

1.Tmt. மரகதம்திரவியம் - கோம்பை
2.Mrs. சரோஜினி ராஜபால்- பாளையங்கோட்டை
3.R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
4.Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் - பெருமாள்புரம்
5.S. ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
6.S. சாந்தகுமாரி - நாசரேத்
7.Mrs. ஜேன்தர்மராஜ் - தோட்டாக்குடி
8.Mrs. ஞானம்பிலிப் - கோவை
9.Mrs. கிறிஸ்டோபல்சாலொமோன் - கோவை
10.Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
11.K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
12.Mrs. ரத்னாபாய்பிரசாத் - மதுரை
13.S. தங்கம் - கன்னியாகுமரி
14.Mrs. ஜாய்மேத்யூ - விக்கிரமசிங்கபுரம்
15.Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
16.T. ஏஞ்சலின்நேசமலர் - சாந்தாபுரம்
17.T. ரஞ்சிதா - கோம்பை
18.G. நிர்மலாவின்செண்ட் - புங்கமுத்தூர்
19.Mrs. ஜோதிமணி - பெருமாள்பட்டி
20.Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
21.Mrs. பியூலாஜேசுராஜன் - பாண்டிச்சேரி
22.Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
23.M.E. அதிசயம் - பனைகுடி
24.D. சாந்தாதேவி - தேனி
25.S. லதா - தேனி
26.J.S. ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
27.J. விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
28.Mrs. ஜெயமணிராஜம்மாள் - கோண்டூர்
29.A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
30.Mrs. ஆலிவ்ஜெயபாலன் - கோவை
31.Mrs. ஃபிராங்களினாஜான் - ஊட்டி
32.Mrs. தேவதாதேவபிரியம் - சென்னை
33.Mrs. கிரேஸ்டெல்லாபக்தர் - சென்னை
34.N. ஜெபத்தாய் - நாசரேத்
35.Mrs. அல்லிராணிகாட்வின் - சென்னை
36.Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
37.Mrs. மேரிநிர்மலா - மதுரை
38.Mrs. ரூபவல்யா - நாசரேத்
39.D. அன்புக்கமலம் - காரைக்குடி
40.A. ஆலிஸ்ஞானசீலி - தூத்துக்குடி
41.Mrs. பிரமிளாரேவதி - கோவை
42.Mrs. தேவபுஸ்பம் - நாசரேத்
43.S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
44.Mrs. ஜெசிமேபல் - கடலூர்
45.R. ஜெபக்கனிமார்க்ஸ் - கூமாபட்டி
46.J. ஜான்மேசேக் - ஒய். ஐயம்பாளையம்
47.J. செல்வராஜ் - புதியம்புத்தூர்
48.G. பூங்கோதை - வெள்ளாளபாளையம்
49.Mrs. பாக்கியத்தாய்செல்வராஜ் - தூத்துக்குடி
50.S.A. சாமுவேல் - பரமத்தி
51.S.R. பெரியசாமி - சேலூர்
52.Mrs. இந்திராஜெபக்கனி - நாசரேத்
53.Mrs. ஃபுளோரா எழில் - ஆம்பூர்
54.Mrs. மேரிசீனித்தாய் பாண்டியன் - விருத்தாசலம்
55.R. அனிதாநெகேமியா - பெருமாள்புரம்
56.E. ஜாய்ஸ்ஹெலன்புனிதா - சென்னை
57.K. ராணி - தூத்துக்குடி
58.M. ஜான் - திருத்தணி
59.Mrs. எபிநேசர் - கடலூர்
60.R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
61.M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
62.Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
63.Mrs. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
64.Mrs. சுசிலாராஜசிங் - சின்னம்மாள்புரம்
65.Mrs. ஷீலாஅலெக்ஸ் - மதிகோடு
66.A. டெய்சி - முதலூர்
67.Miss. பியூலா இம்மானுவேல் - தூத்துக்குடி
68.J. ஜான்சி - ஆனைமலை
69.Mrs. தேவிராஜசிங் - திருப்பூர்
70.Mrs. ஜெபநியூட்டன் - திருநெல்வேலி
71.Mrs. புஷ்பாசோபனம் - கருங்கல்



சொல்லுகிறது. ஒரு பிரசங்கியார் ஒரு முறை சபையில் அன்பைப்பற்றி மிகவும் அழகாக பிரசங்கித்தாராம். அவரைப்போல இதுவரை யாவரும் அன்பைப் பற்றி பேசியது கிடையாது. அந்த அளவு அன்பைப் பற்றி மிக அழகாகவும் யாவரும் புரிந்துகொள்ளும்படியாகவும் பேசி அநேகருடைய பாராட்டைப் பெற்றார். இதை அறிந்த சபை மூப்பர்கள் ஒன்றுகூடி அவரை வீடுவரை வழி அனுப்ப ஏற்பாடுகள் செய்தனர். அப்பொழுது அவரை காரில் அழைத்து செல்ல அவருடைய கார் டிரைவர் சபைகூடாரத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்தான். பிரசங்கியார் வர தாமதம் ஆனபடியால் பாத்ரூம் சென்று விட்டு வரலாம் என்று பாத்ரூம் சென்றுவிட்டான். அந்த வேளையில் அந்த பிரசங்கியாரை வழி அனுப்ப மூப்பர் ஒருவர் அவரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார். அந்நேரத்தில் டிரைவர் இல்லாததை கண்டு பிரசங்கியாரின் முகநாடி வேறுபட்டது. சற்றுநேரம் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து டிரைவர் வந்தவுடன் அவனை பலவிதமான வார்த்தைகளாலே அந்த பிரசங்கியார் திட்டு திட்டு என்று திட்டி வண்டியை எடு என்று கோபத்தோடே சொல்ல அவனும் மிகவும் பயந்துபோய் வண்டியை எடுத்தான். பிரசங்கியாரும் அந்த மூப்பரும் ஏறி உட்கார்ந்தார்கள். அந்த டிரைவரை பிரசங்கியார் வீடு வரை திட்டிக்கொண்டே சென்று இருக்கிறார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்த மூப்பர் சபையில் அவ்வளவு அழகாக அன்பை பற்றிபேசினார். சபையார் அனைவரும் அவரை பாராட்டு மழையில் நனைத்தனர். ஆனால் இவரோ இப்படி இருக்கிறாரே என்று எண்ணிக்கொண்டே வந்தார். பிரசங்கியார் வீட்டுக்கு கார்வந்தவுடன் டிரைவர் இறங்கி கார் கதவை திறந்துவிட்டான். அப்பொழுது அவனைப்பார்த்து கோபத்தோடே முணுமுணுத்துக்கொண்டே வீட்டிற்குள் சென்றார். அப்போது பிரசங்கியார் வீட்டு கடிகாரம் மணியடித்தது அப்பொழுது மணி 11. ஆனால் எட்டு பெல் மட்டுமே அடித்தது. மூப்பர் உடனே அந்த டிரைவரை நோக்கி என்னப்பா உங்கள் பிரசங்கியார் வீட்டு பெல் எட்டு அடிக்கிறது மணி 11 காட்டுகிறதே என்ன விந்தையாக இருக்கிறது என்று கேட்டாராம் அதற்கு அந்த டிரைவர். இங்கே மணிமட்டுமல்ல எல்லாமே சொல் ஒன்றாகவும் செயல் ஒன்றாகவுமே இருக்கும் என்று எந்த விதமான முகநாடியும் வேறுபடாமல் சொன்னானாம். அநேகர் இப்படியே வாழ்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அன்பு நிறைந்தவர்கள் அல்ல.

அன்பு என்றுமே ஒழியாது என காண்கிறோம். "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" (1கொரி.13:8). ஒழிந்துபோகிற காரியங்களைப் பற்றிக்கொண்டு இன்றைய சமுதாயம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. நிலையான அன்பை அநேகர் பற்றிக்கொள்ள தவறிவிடுகின்றனர். அன்பு சகோதரனே, நீ எப்படிப்பட்ட அன்பு உடையவனாக இருக்கின்றாய்? அகாப்பே அன்பு உடையவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள். தேவன் தம்முடைய சொந்த குமாரனையே கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார். இந்தவிதமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை. நம்முடைய ஜீவனை மீட்பதற்காக இயேசுதாமே சிலுவையில் ஜீவனைக் கொடுத்தார். "தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்" (1கொரி.8:3). நீங்கள் எவைகளில் அன்புகூருகிறீர்கள்? உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். உலகத்தில் அன்புகூருகிறவர்களிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. உலகமும் அதிலுள்ளவைகளும் ஒருநாளில் அழிந்துபோம். தேவனுடைய சித்தம் செய்கிறவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள். தேவனில்

அன்புகூருகிறவர்கள் அந்த தேவனால் அறியப்பட்டிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள், அழைக்கப்பட்டிருக்கிறார்கள், பரலோக ஆசீர்வாதங்களைப் பெற தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். இந்த ஆசீர்வாதத்திற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? தனக்கு அன்பு செலுத்தின அந்நிய தீவாரைப்பற்றி பவுல் சொல்வதைக் கவனியுங்கள். "நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம். அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள்" (அப்.8:1,2). அன்பு அன்பு என்று சொல்லிவிட்டால் அன்பு வந்துவிடாது. மற்றவர்களுடைய தேவைகளை அறிந்து நாம் அன்பு செலுத்தவேண்டும். இன்றைக்கு மணிக்கணக்காக அன்பைப் பற்றி பேசுவார்கள். ஆனால் செயல்வடிவில் ஒரு மணிநேரம் கூட அதற்காக ஒதுக்கமாட்டார்கள். ஆண்டவர் இயேசு மூன்றரை வருடம் மனிதர்கள் மத்தியில் தேவனுடைய அன்பை விளங்கப்பண்ணினார். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் என வாசிக்கிறோம். அவரால் சுகமாக்கப் பட்டவர்களையும் அவருடைய அற்புதங்களையும் எழுதினால் புத்தகங்கள் கொள்ளாது உலகம் கொள்ளாது என அப்போஸ்தலர்கள் சொல்லுகிறதை நாம் படிக்கிறோம். இன்றைக்கு இயேசுவின் நாமத்தை தரித்துக்கொண்டு வாழுகிற எத்தனைபேர் அவரைப்போல அன்பு செலுத்துகிறவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்ப்போமானால். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே இருகிறார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, தேவனுடைய ஜனமே, நீங்கள் பிதாவின் அன்பைப்பெற்றவர் களாகவும் தேவனை அறிகிற அறிவைப்பெற்றவர்களாகவும் இருக்கப்பிரயாசப் படுங்கள். உலக ஞானத்திற்கும் அறிவுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் கர்த்தரையும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள்.

**தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எண்ணத்தை மேற்கொள்ளுவது எப்படி?**

கிறிஸ்துவானவர் நம்மில் வாழ இடங்கொடுக்கவேண்டும். கிறிஸ்து நம்மில் இருப்பாரேயானால் நாம் இந்த உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் ஜெயிக்கமுடியும். மேலும் உங்களுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெற்றவர்கள் அப்போஸ்தலர்கள் மற்றும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள். பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கும் விரோதமாய் எழும்புகிற எல்லாமேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2கொரி.10:5). நாம் ஒரு பொருளையோ அல்லது குடும்ப உறவுகளையோ தேவனுக்கு மேலாகவோ அல்லது கிறிஸ்து இயேசுவுக்கு மேலாகவோ உயர்வாக கருதுவோமானால் நாம் நிச்சயமாக பிசாசினால் பிடிபடுவோம். என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்கு பாத்திரனல்ல என்று ஆண்டவர் இயேசு சொன்ன வசனத்தை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். பவுல் அவரை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லாமேட்டிமையையும் நிர்மூலமாக்கி என்று சொல்வதைக் கவனியுங்கள். நாம் தான் அவைகளை நிர்மூலமாக்கவேண்டும். அப்படிப்பட்ட மேட்டிமையான



3. தேவனுடைய உண்மையில் அவனுக்கு நம்பிக்கையிருந்தது.

நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆற்றலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார் (எபி.6:18).

4. தேவன் எதையெல்லாம் தாம் செய்வேன் என்று சொன்னாரோ அதையெல்லாம் அவர் செய்வார் என்ற தேவ வல்லமையில் காலேபுக்கு நம்பிக்கையிருந்தது.

5. நாம் செயல்படவேண்டும். வெறும் தீர்மானம் செய்வது மட்டுமே போதுமானதல்ல (செயல்படவேண்டும்).

இதுவே யோசுவா மற்றும் காலேபுடைய அடிப்படை வேண்டுகோளாயிருந்தது.

...தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாயிருப்பதென்றால் அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் அவருடைய சித்தத்துக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். ஞானஸ்நானம் பெற்ற உடனே பவுல் நியாயப்பிரமாண வல்லுநர்களை எதிர்த்து நின்றான் (அப்.9:20-22).

தீமோத்தேயுவுக்கு பவுல் விசுவாசத்தின் நல்லபோராட்டத்தைப்போராடு என்று சொல்லுகிறார் (1தீமோ.6:12).

எதையாகிலும் செய்யவேண்டுமென்ற வாய்ப்பு நமக்கு இருக்கலாம் அதைச் செய்யும்படி நாம் தீர்மானித்திருக்கலாம். அதைப் பிறகு செய்யலாமென்று தீர்மானிக்கிறோம் மாதிரி பேலிக்ஸ். பிரச்சனைகளை தேவனோடு தொடர்புபடுத்திப் பார்த்தான்.

**தெரிந்துகொள்வோம்**

கீரிப்பிள்ளையின் 'விபரிடே' என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை இந்த புனுகுப்பூனை. புனுகுப் பூனைகளுக்கும், பூனைகளுக்கும பொதுவாக சில ஒற்றுமைகள் உண்டு.

புனுகுப் பூனைகளில் சிலவற்றால் கால் நகங்களை உள்ளுக்கு இழுத்துக்கொள்ள முடியும். இவைகளின் கால்கள் குட்டையாகவும், முகம் நீளமாகவும் இருக்கும்.

புனுகுப் பூனைகளின் உடலில் வாசனைச்சுரப்பிகள் உள்ளன. வாசனைத் திரவியங்கள் தயாரிக்க உதவும் கஸ்தூரியை சுரக்கின்றன இச்சுரப்பிகள். இவைகளில் வில்லாங், பீண்டூராஸ், வெண் மூக்கு புனுகுப் பூனை, இந்திய புனுகுப்பூனை என்பவை குறிப்பிடத்தக்கவை.

லிஸ்ஸாங் இனம் பர்மா, நேபாளம், தென் சீனா ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. சுமார் 38 செ.மீ. நீளம் வரை வளரக்கூடிய இதன் வாலின் நீளம் உடல் நீளத்திற்குச் சமமாக இருக்கும்

பீண்டூராஸ் இனம் தென் கிழக்கு ஆசியாவில் அஸ்ஸாம் முதல் போர்னியோ வரையுள்ள பகுதிகளின் காடுகளில் காணப்படுகிறது. 65 முதல் 95 செ.மீ. நீளம் வரை வளரக்கூடிய இது மரக்கிளைகளைப் பற்றிக்கொள்ளும் வகையில் இதன் வால் அமைந்திருக்கும். இவற்றின் உணவு பழங்கள், காய்கறிகள், சிறு விலங்குகள் ஆகும்.

வெண் மூக்கு புனுகுப் பூனை தென்கிழக்கு ஆசிய பகுதிகளில் காணப்படுகின்றன.

இந்திய புனுகுப்பூனை 40 முதல் 65 செ.மீ.நீளம் வரை வளரும். இதன் உடலில் அமைந்துள்ளவாசனைச் சுரப்பிகள் கஸ்தூரியை சுரக்கின்றன. இது இந்தியா, ஜாவா, சுமத்திரா, பர்மா, தெற்கு சீனா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது.

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041





## பாடம் –27
## காலேப், ஒரு மாபெரும் நேர்மறை நம்பிக்கையாளர்
**Caleb, A Great Faithful Optimist**

*-Jerry*

1. காலேப் - யூதா கோத்திரத்தின் சந்ததி
2. யாக்கோபின் சந்ததியார் யோசேப்பை அறியாத பார்வோன் எகிப்தை ஆண்டபோது அடிமைத்தனத்திற்குள்ளக்கப்பட்டனர்.
3. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் அவர்களை விடுவித்து கானானுக்குக் கொண்டுவந்தார்.
4. கானானுக்குள் செல்லுமுன் அந்த தேசத்தை வேவுபார்க்க 12 மனிதர்கள் அனுப்பப்பட்டார்கள். இது ஏதோ மக்கள் போகலாமா வேண்டாமா என்று தீர்மானிக்கும் வாய்ப்பை அளிக்க அல்ல.
5. யோசுவா மற்றும் காலேப் ஆகிய இரண்டுபேரும் மிகவும் நம்பிக்கையான அறிக்கை கொடுத்தார்கள்.
6. 10 பேர் நம்பிக்கையற்ற தகவல்களைக் (அநேகமாக மிகைப்படுத்தப்பட்டது) கொடுத்தனர். மக்கள் அந்த நகரம் உட்புக முடியாதது என்று நினைத்தனர்.
7. மக்கள் ஒரு புதிய தலைவனைத் தேர்வுசெய்து கொண்டு எகிப்துக்குத் திரும்பிச் செல்ல விரும்பினர். அதற்கு தண்டனையாக 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரும் கானானுக்குள் பிரவேசிக்க கூடாதென்று உறுதிசெய்தனர். வனாந்திரத்திலே சுற்றித்திரிவதென்பது அவர்களுக்கு ஒருவகையில் மரணதண்டனையைப்போன்றது.
8. ஏமாற்றத்தின் காலம், நம்பிக்கையின்மை, மற்றும் சாகக்காத்திருத்தல் போன்றது.
9. எதிர்த்து கிளர்ச்சி செய்தவர்கள் முன், காலேப் தேவனிடமுள்ள தன் விசுவாசத்தில் மிகவும் உறுதியாக நின்றான் (எண்.13:30).

1. இந்த சம்பவம் தொடர்பாக தேவனுடைய சித்தம் இன்னதென்று காலேபுக்குத் தெரியும். அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் என்று உண்மையின் அடிப்படையில் அவருக்கு அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன என்பது உண்மை என்று காலேவுக்குத் தெரியும்.
2. இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டு வரவேண்டும் என்று தேவன் விரும்பினார் என்பது காலேபுக்குத் தெரியும்.
3. தேவன் இஸ்ரவேலருக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு அவர்கள் பிரயாணப்பட்டுப்போக வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பது காலேபுக்குத் தெரியும்.
4. மக்கள் தன்னை விசுவாசிக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் என்று காலேபுக்குத் தெரியும்.
5. மக்கள் அந்த தேசத்தை வெற்றிகொள்ளவேண்டுமென்று விரும்புகிறார் என்று காலேபுக்குத் தெரியும்.
6. நமக்கு பலமான விசுவாசமிருக்க வேண்டுமானால் தேவசித்தம் இன்னதென்று நாம் புரிந்து வைத்திருக்கவேண்டும் (ரோம.10:17).

தேவன் மீது காலேபுக்கு விசுவாசமிருந்தது.

1. அவனுக்கு தேவனுடைய நன்மையில் நம்பிக்கையிருந்தது. மனிதனுடைய நன்மைக்கு ஏதுவல்லாத ஆலோசனைகளை தேவன் கொடுப்பதில்லை.
2. அவனுக்கு தேவனுடைய அறிவிலும் ஞானத்திலும் விசுவாசமிருந்தது.



எண்ணத்தையும் பேச்சையும் நம்மை விட்டு எடுத்துப்போட்டு அவைகளை கிறிஸ்துவுக்குக் கீழாக கொண்டுவரவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து எல்லாவற்றிக்கும் மேலாக ஆட்சிசெய்ய நாம் அனுமதிக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எண்ணத்தை மேற்கொள்ளமுடியும். நீங்கள் மேற்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்

### வாசகர் கடிதம்

கர்த்தரின் பணியில் அய்யா அவர்களுக்கு இயேசுவின் திருநாமத்தில் தோத்திரம் கூறி எழுதும் செய்தி.

கடந்த 2017 ம் ஆண்டின் வேத அறிவுப்போட்டியில் கலந்து விடைகள் எழுதிவந்ததற்காக தேவனிடத்திற்கு செல்லும் வழியை மனிதன் கண்டுபிடிக்க முடியுமா? என்ற புத்தகத்தை பரிசாக அனுப்பி உதவியிருக்கிறீர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் 09.01.2018 ல் கிடைத்தது.

தங்களின் இதழ் வழியாக வேதத்தின் மறைபொருளான சத்தியங்களை அறியச் செய்ததற்காக தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.
தொடர்ந்து இதழ் அனுப்பி உதவுங்கள் தங்களின் தேவ ஊழியத்திற்காக தினமும் ஜெபிக்கிறேன். ஜெபிக்கவும்.

அன்புடன்,
E.அதிசயம்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

ரோமர் 16:16 அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு உங்கள் வாசகி எழுதிக்கொள்வது...

இந்த மாத இதழில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் கடனாளியாயிருக்கிறேன் என்ற தலைப்பில் மிகவும் நன்றாக உள்ளது.

இன்னும் எங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்க வழி செய்கிறது. இன்னும் இந்த இதழ் வளர எங்கள் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
G.பூங்கோதை

### ஆசிரியர் கடிதம்

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழின் வாசகர் அனைவருக்கும்
நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.
தாங்கள் தொடர்ந்து மாத இதழைப்பெற்று வேதசத்தியங்களை
தெரிந்தகொண்டும் கற்றுக்கொண்டும் வருவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.
தேவன் நம்மெல்லோரையும் இரட்சிக்க இயேசுவை நமக்காக கொடுத்திருக்கிறார்.
அவருடைய வல்லமையுள்ள வசனங்களை ஒவ்வொருநாளும் படியுங்கள். அது உங்களை
நித்தியத்திற்கு நேரே வழிநடத்தும். இந்தப் பூமியிலே அவரையும் அவருடைய வல்லமையுள்ள
வசனங்களையும் நாம் தெரிந்துகொள்ளும்படியாக நம்மை முன்குறித்தவர் தேவன்.
அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். அவர் தம்முடைய ஆநாதி
தீர்மானத்தின்படியே நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் முன்குறித்திருக்கிறார்.
இந்த அன்பில் நிலைத்திருங்கள்.
இதற்கு விரோதமாக எழும்புகிற எந்தவிதமான செய்கைகளையும் அழித்துப்போடுங்கள்.
உலகம் ஒருபோதும் உங்களை இரட்சிக்காது, உங்களுடைய வாழ்க்கையில்
சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவராது. கிறிஸ்து ஒருவரே
உங்களுடைய வாழ்க்கையில் இவைகளை கொண்டுவர முடியும்.
எனவே கிறிஸ்துவுக்குள் வாழுங்கள். கிறிஸ்துவுக்கு வெளியே
இரட்சிப்பு இல்லை. தேவன் நமக்கு கிருபையாய் கொடுத்த இந்த வாழ்க்கையை
கிறிஸ்துவுக்காகவாழுங்கள். அப்பொழுது நித்தியத்தில் அவரோடு
நித்திய நித்தியமாக வாழுவீர்கள்.உங்களுக்காக அநுதினமும் ஜெபிக்கிறோம்.

அன்புடன்,
ஆசிரியர்

# பரலோகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## Why We Believe In Heaven

-J.C.Choate



நான் பரலோகத்தைப் பற்றி பேசும்போது, நான் வானத்தையோ, மேகங்களையோ அல்லது சுற்றுச் சூழலைப் பற்றியோ பேசவில்லை. நான் முழு வான்வெளியைக் குறித்தும்கூட பேசிக் கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளை பரலோகத்திற்கு ஒப்பிடுகின்றோம், ஆனால் நான் நினைக்கின்ற பரலோகமானது தேவன் வாசஞ்செய்கின்ற இடமாகும். பக்தியுள்ள ஆத்துமாக்கள் நித்தியத்தைக் கழிக்கும் ஒரு அழகான இடம், நீதிமான்களின் இருப்பிடம். பரலோகமானது தேவனுடைய வார்த்தையில் புதிய எருசலேமாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வேதவாக்கியங்கள் பரலோகத்தைப் பற்றிபேசுகிறது. நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவானவர், "சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்.5:12) என்றார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (லூக்.11:2). அவர் அவர்களுக்கு, "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்.6:20,21) என்று அறிவுறுத்தினார். கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரனென்று அப்போஸ்தலர்கள் அறிக்கையிட்ட பிறகு அவர்களிடம், "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத்.16:19). கர்த்தர் தாம் போகும் சகலபட்டணங்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே அனுப்பிய எழுபது பேரை நோக்கி: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்.10:19,20).

தொடர்ந்து அவர் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமென அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.15:7). இது கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவர் எனவெளிப்படுத்துகிறது (யோவா.3:13). இயேசு சீஷர்களுக்கு வானத்திலிருந்து வந்த அப்பத்தைப் பிதாவானவர் கொடுக்கிறார் எனக் கூறுகிறார் (யோவா.6:32). பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி.5:1) என்றார்.



விழுவது பயங்கரமாயிருக்குமென வேதம்கூறுவதை அறியீர்களா? தாவீதின் குமாரனாகிய இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராகிய இயேசு இன்றும் நன்மைசெய்கிறவராக இருக்கிறார். நமக்காக ஜீவனையே கொடுக்கவந்த இயேசுவை உன் கணவனும், உம் குடும்பமும் அறிந்து கொள்ளவில்லையா? இயேசு என்றாலே சில குடும்பத்தலைவர்கள் நாபாலைப் போல சீறிவிழுகிறவர்களாகவும், முள்ளைப்போல் குத்துகிறவர்களாகவும் இருக்கலாம். அன்பு சகோதரியே, ஒருவேளை நீங்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர்களென்றால் இயேசுவின் மூலம் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள், இயேசுவையும், பிதாவையும் பிரியப்படுத்தக்கூடிய வற்றையே செய்யுங்கள். கர்த்தருடைய கற்பனைகளின் படி நடந்து வீட்டை கட்டுங்கள். ஞானமுள்ளவர்களாயிருப்பீர்களென்றால் நிச்சயமாகவே உங்கள் வீட்டை அதாவது குடும்பத்தைக் கட்டமுடியும். புத்தியற்றவர்களாயிருந்தால் நிச்சயமாக உங்களாலேயே உங்கள் குடும்பத்துக்கு, பொல்லாப்பும் தீமையும் வரும்.

சகோதரியே, ஒருவேளை நீங்கள் கர்த்தருடைய சமாதானத்திற் கேற்றவைகளை நாடாமல் நீங்களே உங்கள் குடும்பத்தின் மேல் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும், தீமைக்கும் காரணமாயிருப்பீர்களானால், இன்றே மனந்திரும்புங்கள். அந்த அபிகாயில் புத்தியாய் தாவீதினிடத்தில் சமாதான வார்த்தைகளை பேசியதைப் போல (1சாமு.25:23–35). இயேசுவை ஏற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் பொல்லாப்புக்கு நீங்கலாகும்படி தேவனோடே ஒப்புரவாகுங்கள். இயேசு சீக்கிரமாய் திரும்ப வரப்போகிறார். அவர் உங்களுக்காகவே ஜீவனைக் கொடுத்து உங்களுக்கு நன்மை செய்தாரே. நீங்கள் இதுவரை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவராய் இருந்தால் இன்றே அவரை விசுவாசித்து, அவரே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது இயேசு தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார். நீங்கள் பொல்லாப்புக்கு நீங்கலாகி காக்கப்படுவீர்கள். ஒரு வேளை உங்கள் கணவனும் குடும்பத்தாரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்காக இயேசுவின் மூலம் தேவனை நோக்கிக் கெஞ்சுங்கள். அந்த அபிகாயிலைப்போல மிகக் கவனமாக அவசரமாக இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு அறிவித்து உங்கள் கணவனையும் உங்கள் குடும்பத்தையும் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும் ஆக்கினைக்கும் தப்புவியுங்கள். "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" (2தெச.1:7,8).

தாவீதைக் குறித்து, அவர் செய்த நன்மைகளைக் குறித்தும் அறியாது பொல்லாப்புக்கும் தீமைக்கும் உள்ளாகவிருந்த நாபாலையும் அவன் குடும்பத்தாரையும் காப்பாற்றிய செயல் ஒரு ஞானமுள்ள செயலல்லவா! அந்த ஞான இருதயமுள்ள ஸ்திரீயாகிய அபிகாயிலைப் போல நாமும் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக செயல்படும் படி தேவன் தாமே உதவிசெய்வாராக!

**குணசாலியான ஸ்திரீ**

**தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்**

**நீதிமொழிகள் 12:4**



# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

The Women That Were Wise Hearted

*-Glory Arjunan*



ஞான இருதயமுள்ள ஸ்திரீகளின் வரிசையில் அடுத்து வருவது அபிகாயில். தீவிரமாகக் கவனிக்க வேண்டிய அவசரக் காரியத்தைக் கவனித்து தன் குடும்பத்தாரைக் காப்பாற்றுகிறாள் (Meeting an emergency and saving her household). ஞான இருதயத்தைக் கொண்டிருந்த இவள் வரவிருக்கும் பொல்லாப்பிற்கு தன் கணவரையும் தன் வீட்டார் அனைவரையும் தப்புவிக்கிறாள். அபிகாயிலின் கணவன் நாபால். இவன் பேலியாளின் மகனாயிருந்தான். அதாவது யோக்கிதையற்ற மகனாயிருந்தான். 2சாமு.23:6–ல் “பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்” என்று வாசிக்கிறோம்.

இப்பேர்பட்ட நபர்களை நெருங்கினால் முள்ளைப் போல குத்தி பதம் பார்க்கக் கூடியவர்களாயிருப்பார்கள். இந்த நாபால் பேலியாளின் மகன் என அழைக்கப்பட காரண மென்ன? 1சாமு.25:14–17 வரை உள்ள வசனங்களில் இவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. “அப்பொழுது வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்கத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை அனுப்பினான்; அவர்கள் பேரில் அவர் சீறினார். அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினது மில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற் போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள். இப்போதும் நீர் செய்ய வேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும் நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்றான்”. பாருங்கள் தன்னிடத்தில் சுகசெய்தியை விசாரிக்க வந்த மனுஷரிடம் சீறினார் என வாசிக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்த மனுஷர் இந்த நாபாலின் வேலைக்காரர்களுக்கு உபகாரிகளாகவும், மதிலாகவுமிருந்திருக்கிறார்கள். எனவே முள்ளுக்குச் சமானமாயிருந்த இந்த நாபாலுக்கு எதிராக தாவீதும் அவன் கூட்டதாரும் புறப்பட்டனர். இதை அறிந்த நபாலின் வேலைக்காரன் நாபாலின் மனைவி அபிகாயிலிடம் ‘நம் எஜமான் மேலும்.... பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது’ என்றான். இதைக் கேட்ட அபிகாயில் தன் கணவன் மேலும் தன்னுடைய குடும்பத்தார் மேலும் வரவிருந்த பொல்லாப்பை தடுக்கும் பொருட்டு அவசரமாய் புறப்பட்டு தாவீதினிடத்தில் ஞானமாய் பேசி தன் குடும்பத்தார் மேல் வரவிருந்த பொல்லப்பை தடுத்து நிறுத்தினாள். இது இவளுடைய ஞானமல்லவா!

அன்பு சகோதரிகளே, “ புத்தியுள்ள (ஞானமுள்ள) ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்” (நீதி.14:1) என நாம் அறிவோம். ஒரு மனிதனுடைய (தாவீதின்) கையில் விழுவது இந்தகுடும்பத்திற்கு தீங்கிழைக்கவிருந்தால், தேவனுடைய கைகளில்



மீண்டும் கலாத்திய சபை கிறிஸ்தவர்களுக்கு, “நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” (கலாத்.1:8) என்றான். தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும் கர்த்தர் வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு உறுதிப்படுத்தினார் (2தெச.1:7-9). பேதுரு, “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது” (1பேது.1:3,4) என்றான். யோவான், பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது” (வெளி.21:1,2) என்றான். பரலோகம், தேவனுடைய நித்திய வாசஸ்தலம் மேலும் ஆத்துமாவின் வீடு என்பனவற்றைப் பற்றிய வேத பகுதிகள் சிலவற்றை தொடர்ச்சியாக நாம் காணலாம்.

பரலோகத்திற்கு யார் செல்லுவார்கள்? இந்த நாளைக்குறித்து இயேசு ஜனங்களுக்கு, “நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்.18:3) என்றார். இதன் அர்த்தமானது, குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகள் அல்லது பொறுப்புள்ள வயதை அடையாதவர்கள், மேலும் அவர்கள் நல்லது கெட்டதை அறியாதிருக்கிறபடியினால், தங்களுடைய செயல்களுக்கு உத்திரவாதிகளாகயிராதபடியினால், அவர்கள் மரிக்கும் போது பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று அர்த்தமாகிறது. கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் காக்கப்பட்டிருக்கும். பவுல், “அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்” (1கொரி.15:24) என்றான். சரீரம் அல்லது சபைக்குக் கிறிஸ்து இரட்சகராயிருக்கிறாரென எபேசியர் 5:23-ல் வாசிக்கின்றோம் (கொலே.1;18; அப்.20:28). இது “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் ...”கர்த்தர் நிறுத்திக்கொள்வார் எனச் சுட்டிக் காண்பிக்கக் கூடியதாக இருக்கிறது (எபே.5:27). கர்த்தர் எவ்வாறு தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அழிக்கும்படிக்கு அக்கினிச் சூளையிலே போடுவார்கள் என்பதை மத்தேயு13:41-ல் வாசிக்கிறோம். தவிர சபையானது பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ள போகுமானால், அதன் பொருள் நாம் நித்திய

ரட்சிப்பை பெற்றிருக்க கண்டிப்பாக சபையில் இருக்கவேண்டும். வேதவாக்கியமும்கூட உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பரலோகத்திற்குச் செல்லுவார்கள் எனக்கூறுகிறது. கிறிஸ்து, "…..நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி.2:10) என்றார். யாக்கோபு, "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்.1:12) என்றான். யோவான், 'ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி.22:14) என்று எழுதினார்.

அதே சமயம் இது மற்றவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்களென சுட்டிக்காண்பிக்கிறதாக இருக்கிறது. இவர்களோடு சாத்தானும் அவனுடைய தூதர்களும், (மத்.25:41), அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களும் (மத்.13:41) மேலும் துன்மார்க்கரும் (1கொரி.6:9,10; கலா.5:19-21) சேர்க்கப்படுவார்கள். வெளிப்படுத்தல் 21:8-ல் நாம், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பான வர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாரா தனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவர்கள் என்றார்" என வாசிக்கிறோம். மாயக்காரரும் பரலோகத்திற்குச் செல்லமாட்டார்களென நினைவில் கொள்ளுங்கள் (மத்.24:51) மேலும் கடைசியாக, மோசம்போகிறவர்களும் சமயப் பிழையில் நிலைத்திருக்கிறவர்கள் கேடுள்ளவர்களாவார்கள் (2தீமோ.3:13; ரோம.16:17,18).

யார் பரலோகத்தில் இருக்கிறார்கள்? அங்கே தேவன் இருக்கிறார். ஜீவனுள்ள தேவன் வாசஞ்செய்கிற நகரமென பரலோகம் தாமே வர்ணிக்கப்பட்டுள்ளது (எபே.12:22). அங்கே இயேசு கிறிஸ்து இருக்கிறார் (அப்.2:32,33). அங்கே தேவதூதர்கள் இருக்கிறார்கள் (2தெச.1:7-9).

பரலோகம் எதைப் போலிருக்கும்? யோவான் பரலோகத்தைக் குறித்து, "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பியது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்; இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள்,



**உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**" என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற "நற்குணம்" எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21–25–ல்"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும்கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, "**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**" என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று..." ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து விக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

பெண்கள் பகுதி

# நல்லவராய் இருப்பதே நன்று

## Being "Good" Is Enough

*-Betty*

எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக்கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? “உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ....”(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்”(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, “அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி”,எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2–ல், “இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது;**



இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவதண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்” (வெளி.21:1-7) என்று எழுதினார். தொடர்ந்து வாசிக்கையில், யோவான், “பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்” (வெளி.222:1-7) என எழுதுகிறான்.

நிச்சயமாக, நாம் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் முழுவதையும் வாசிக்கையில், பரலோகம் பொன்னாலாகிய நகரத்தின் வீதிகளையும் சகலவித இரத்தினங்களினாலும் மற்றும் வச்சிரக்கல்லாலும் ஆன அஸ்திபாரங்களையுடைய நகரத்தின் மதில்களையும் கொண்டிருக்குமென ஆவிக்குள்ளான யோவான் கூறுவதை நாம் அறிந்திருக்கிறோம். யோவான் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தை இவ்வாறான வசனங்களில் ஆரம்பித்தார்: “சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது” (வெளி.1:1-3). ஆனபடியினால், மனுஷனாகிய யோவான், இதற்குமுன் ஒரு மனுஷனும் ஒருபோதும் கண்டிராதவைகளைக் காண சக்தியுடையவனாயிருந்தான். பரலோகத்தைக் குறித்தும் அதன் சகல மகிமையைக் குறித்தும் எழுதுவதற்கு, அவன் மனிதனால் புரிந்து கொள்ளத்தக்க வார்த்தைகளிலே

எழுதவேண்டியவனாயிருந்தான். ஆனபடியினால், அவன் தான் பார்த்தவற்றை சூசகமான மொழியிலும், அவற்றை இங்கே பூமியிலுள்ள பொருட்களான பொன் மற்றும் விலையுயர்ந்த கற்களோடு ஒப்பிட்டும் அதிகமாக வர்ணித்தார். இவை உண்மையாகவே வர்ணனைக்கும் அப்பாற்பட்டவிதத்தில் மிக அழகுள்ளதாகவும் அற்புதமானதாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம் எதைப்போலுள்ளது என வாசித்தபிறகு, ஒருவன் தன் மனதில் அழுத்தப்பட்டு அங்கே போக விருப்பம் கொண்டிருந்தால், இன்னும் ஒரு பகுதி சொல்லப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பரலோகம் ஆயத்தமாக்கப்பட்ட ஜனங்களுக்கென்று ஆயத்தமாக்கபட்ட இடமாயிருக்கிறதென்று சிலர் சொல்லியிருக்கின்றனர். இது தேவனும் அவருடைய ஜனங்களும் என்றென்றும் வாசஞ்செய்யப்போகின்ற இடமாயிருக்கிறது. ஆனபடியினால் மனிதன் இவ்வாழ்வை விட்டு பிரியும்போது உண்மையாகவே அவன் மரிப்பதில்லை. அவன் மாம்சத்தில் மரிக்கிறான், ஆனால் அவனுடைய ஆத்துமா நித்தியநித்தியமாக வாசம்செய்யும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் ஒரு நாளில் என்றென்றும் மரிக்காமலிருக்கின்ற பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். இவையெல்லாம் முழுவதும் அறிந்து கொள்ள வரும்போது, நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஆனபடியினால் நாம் விசுவாசத்தினால் இதை ஏற்றுக் கொண்டு இது உண்மையான ஒன்றாக மாறும் நேரம் வரைக்கும் உறுதியுடனிருக்கவேண்டும். தேவன் நம்மை வஞ்சிக்கமாட்டாரென்ற முழுநம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒருபோதும் கண்டிராததும் அல்லது கற்பனை செய்திராததுமான காரியத்தை நமக்கு அருளுவார்.

நீங்கள் பரலோகம் செல்ல விரும்பமாட்டீர்களா? ஒரு நாளில் தேவனோடு வாழ விரும்பமாட்டீர்களா? வாழ்க்கை இப்படியிருக்குமானால் அது எவ்வளவு கோரமானதாயிருக்கும். இங்கே பல பிரச்சனைகளும், தொந்தரவுகளும், தலைவலிகளும் உள்ளன. இங்கே பலவிதமான வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் உள்ளன. ஆனால் நாம் இவ்வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு சிறந்த உலகத்தை நோக்கும்போது இந்த உலக வாழ்வை எப்படியும் சமாளிக்கமுடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் நீங்கள் கெட்டுப்போன நிலையிலிருக்கிறீர்கள். மேலும் கல்லறைக்கு அப்பால் நம்பிக்கையில்லாதவர்களா யிருக்கிறீர்கள். நீங்கள் இதை உணரும் படிக்கும் இதை சரிசெய்து கொள்ள முயற்சி செய்யும்படிக்கும் உங்களுக்காக நான் ஜெபிக்க விரும்புகிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாளில் பரலோகத்திற்குச் செல்லும் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளமுடியும் (மத்.16:16). நீங்கள் இதைச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சிப்பது மட்டுமின்றி, தம்முடைய சபையிலும் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). நீங்கள் இன்னும் காலத்தையும் தருணத்தையும் பெற்றிருக்கையில் இதை நீங்கள் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.







பாடம் -4

**நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசுவே**

Jesus is the Message to our Friendes

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

இது எப்படி சாத்தியமாகும்? சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம்!

அவருடைய இரத்தத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனும் தேவனோடும் மற்றவரோடும் சமாதானம் கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறோம் (எபே.2:14-19).

உலகத்திற்கான இரட்சிப்பின் செய்தி இந்த மக்கள் சரீரமாகிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டு, இயேசு அதன் இரட்சகராகவும் அதன் தலைவராகவுமிருக்கிறார். எபேசியர் 5:23, **"கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்' என்று சொல்லுகிறது. சபையின் பணி "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப்...." "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" பிரசங்கிப்பதேயாகும் (எபே.3:8,4:15).**

சபையின் ஊழியம் மத்தேயு 28:19,20 ல் மிகச் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. அங்கே இயேசு, **"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்".** சபையானது கிறிஸ்துவினிடத்திலிருந்து மனிதவர்க்கத்திற்கு செல்லும் உண்மையான பாலமாக இருக்கிறது!

சபை கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறபடியால் பூமியின் மேல் கிறிஸ்துவை சபை அடையாளப்படுத்துகிறது. எபே.1:22-23 **"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்"** என்று சொல்லுகிறது.

கூடுதலாக, தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக (அவருக்குள்) இயேசுவுக்குள் இருக்கிறபடியால் கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறார் (கொலோ.2:9).

இந்த இரண்டு சத்தியங்களைக் கொண்டு ஊகித்துப் பார்ப்போம் அப்பொழுது சபை தேவனை இப்பூமியில் அடையாளப்படுத்துகிறது எனப் புரிந்துகொள்வோம். 2கொரி.4:6 ல் அப்போஸ்தலனாகிய பவுல், "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" என்றெழுதுகிறார்.

தேவனுடைய ஒளி தேவனிடமிருந்து கிறிஸ்துவுக்கும், பின் கிறிஸ்துவினிடமிருந்து தம்முடைய சீஷர்களுக்கும் அதன்பின் தம்முடைய சீஷர்களிடமிருந்து உலகத்தில் மீதியானவர்களுக்கும் கடந்து செல்கிறது! இதன் பொருள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிறது என்பதாகும். தேவனுடைய மகிமை இன்று சபையில் இருக்கிறது: "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபே.3:20,21).